**நாணயச் சபை**

**இலங்கை மத்திய வங்கி**

**2020 நவெம்பர் 09** | **சுற்றறிக்கை** | **2020இன் 10ஆம் இலக்கம்**

---

**கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களுக்கான கடன் காலதாமதங்கள்**

கொவிட்-19 இன் இரண்டாவது அலை காரணமாக வியாபாரங்களும் தனிநபர்களும் முகம்கொடுக்கும் சவால்களை எதிர்கொள்ளும் விதமாக கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களுக்கான கடன் காலதாமதத்தினை (இதன் பிறகு திட்டம் எனக் குறித்துரைக்கப்படும்) கீழே குறித்துரைக்கப்பட்டவாறு 2020 ஒத்தோபர் 1 இலிருந்து ஆரம்பமாகும் ஆறு மாத காலத்திற்கு நீடிக்குமாறு இலங்கை மத்திய வங்கி உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளைப் பணிக்கிறது.

இதற்கமைய, உரிமம்பெற்ற அனைத்து வங்கிகளாலும் இத்திட்டமானது ஒரு சீர்த்தன்மையோடு நடைமுறைப்படுத்துவதற்கு இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது. எனினும், இச்சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்படும் நன்மைகளிலும் குறைவில்லாத ஒட்டுமொத்த நன்மைகள் கடன்படுநர்களுக்குக் கிடைக்கும் வகையில் உரிமம்பெற்ற வங்கிகள் ஏதாவது மேலதிக சலுகைகளை கடன்படுநர்களுக்கு வழங்கலாம்.

1. **கடன் காலதாமதத்திற்கான காலம் மற்றும் பிரயோகப்பாடு**

   (அ) உரிமம்பெற்ற வங்கிகளின் பணிப்பாளர் சபையால் அல்லது ஏனைய அதிகாரமளிக்கப்பட்ட சபையினரால் வழங்கப்படும் உள்ளக வழிகாட்டலின் அடிப்படையில் தகுதியுடைய கடன்படுநர்கள் எதிர்கொள்ளும் நிதிப் பிரச்சனைகளைக் கருத்திற்கொண்டு 2020 ஒத்தோபர் 01 இலிருந்து ஆரம்பமாகும் ஆறு மாத காலத்திற்கு மேற்படாத அல்லது பொருத்தமான குறுங்காலப்பகுதியாக கடன் காலதாமதம் இருக்கும்.

   (ஆ) பாதிக்கப்பட்ட கடன்படுநர்களின் கோரிக்கைகளுக்கமைய கடன் காலதாமதம் மூலதனம் மற்றும் வட்டி ஆகிய இரண்டிற்குமாக வழங்கப்படலாம்.

2. **விண்ணப்பத்தினைச் சமர்ப்பிப்பதற்காக கால எல்லை**

   தகுதியுடைய கடன்படுநர்கள் எழுத்து அல்லது இலத்திரனியல் வழிமுறைகள் மூலமாக 2020 நவெம்பர் 30 அல்லது அதற்கு முன் கடன் காலதாமதத்திற்கு விண்ணப்பிக்கலாம். பாதிக்கப்பட்ட கடன்படுநர்கள் கோரிக்கையை மேற்கொள்வதற்காக ஒரு இலகுவான படிவத்தினை (வன்படிவம்/ மென்படிவம்) வழங்குவதுடன் சலுகைகள், விண்ணப்பப் படிவங்கள் கால எல்லைகள் என்பனவற்றினை மின்னஞ்சல் மற்றும் குறுந்தகவல் உட்பட அச்சிடப்பட்ட வடிவில் அத்துடன்/ அல்லது இலத்திரனியலினூடான வழிமுறைகளில் அறிவித்தல் வேண்டும்.

3. **தகைமையுடைய கடன்படுநர்கள்**

   (அ) சுற்றுலாத் துறை, ஆடைக் கைத்தொழில், தகவல் தொழில்நுட்பம், தேயிலை, வாசனைத்திரவியங்கள், பெருந்தோட்டம், ஏற்பாட்டு வசதிகளை வழங்குவோர், நிகழ்ச்சி முகாமைத்துவம் மற்றும் கொவிட்-19 காரணமாக ஏற்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முடக்கத்தினால் மற்றும் வேலை இடையூறு காரணமாக மிகவும் பாதிக்கப்பட்ட ஏனைய துறைகளில் ஈடுபட்டுள்ள வியாபாரங்கள், உரிமையாளர்கள் மற்றும் தனிநபர்கள்,

   (ஆ) தயாரிப்புக் கைத்தொழில், நிதிசாராப் பணிகள், வேளாண்மை (செயன்முறை உள்ளடங்கலாக), கட்டடவாக்கம், பெறுமதிசேர்ப்பு, மருந்து விநியோகத்தர்கள் உள்ளடங்கிய வணிக வியாபாரங்கள் போன்ற வியாபாரத் துறைகளில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் மற்றும் தனிநபர்கள். வருடாந்தப் புரள்வானது ரூ.1 பில்லியன் வரைக்குமான வியாபாரங்கள் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களாகக் குறிப்பிடப்படுகின்றது.

(இ) கொவிட்-19 பரவலின் விளைவாக வேலைகள் அல்லது வருமானத்தை இழந்த சுயதொழில் வியாபாரங்கள் அல்லது தனிநபர்கள்.

(ஈ) கொவிட்-19 பரவலின் காரணமாக வருமானம்/ வியாபாரம் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் மற்றும் வெளிநாட்டு நாணயத்தில் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய வெளிநாட்டு நாணயம் உழைப்போர் (தனிநபர் மற்றும் வியாபாரங்கள்).

4. **தகைமையுடைய கடன் வசதிகள்**

2020 ஒத்தோபர் 01இல் செயற்படு கடன் பிரிவிலுள்ள ரூபாய் மற்றும் வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தவணைக் கட்டணக் கடன்கள், குத்தகை வசதிகள், அடகுபிடித்தல், மேலதிகப்பற்று, வர்த்தக நிதியிடல் மற்றும் ஏனைய கடன் வசதிகள். சௌபாக்கிய கொவிட்-19 மீளெழுச்சி வசதிகள் கட்டம் I, II மற்றும் III இற்கான கடன் காலதாமதத்தை வழங்குவது தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகள் 2020 நவெம்பர் 6இல் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும்.

5. **கடன் காலதாமதக் கட்டமைப்பு**

(அ) உரிமம்பெற்ற வங்கிகள் 2020 ஒத்தோபர் 1ஆம் திகதியிலிருந்து 2021 மாச்சு 31ஆம் திகதி வரை அல்லது அதற்குக் குறைவான பொருத்தமான காலதாமத காலப்பகுதியில் செலுத்த வேண்டிய மூலதனம் மற்றும் ஒப்பந்த வட்டி வீதத்திலான வட்டி ஆகியவற்றை தவணைக் கட்டணக் கடனாக மாற்ற வேண்டும்.

(ஆ) அந்தந்த காலதாமதத்திற்குப் பின்னர் உடனடியாக கிடைக்கக்கூடிய 364 நாட்கள் திறைசேரி உண்டியலின் ஏல வீதத்தை விட அதிகரிக்காமல் அத்துடன் ஆண்டிற்கு 1 வீதத்தைக் கூட்டி உரிமம்பெற்ற வங்கிகள் தவணைக் கடனாக மாற்றப்பட்ட கடன்களுக்கு வட்டியை அறவிட முடியும். வெளிநாட்டு நாணயக் கடன்களைப் பொறுத்தவரையில், உரிமம்பெற்ற வங்கிகள் தவணைக் கடனாக மாற்றப்பட்ட கடன்களுக்கான வட்டியாக தற்போதைய சந்தை வட்டியை விடக் குறைவாக அல்லது ஒப்பந்த வட்டி இவற்றில் குறைவான வட்டி வீதத்தை அறவிட வேண்டும்.

(இ) அத்தகைய மாற்றப்பட்ட கடன்களின் திருப்பிச் செலுத்தும் காலம் குறைந்தபட்சம் 24 மாதங்களாக இருப்பதுடன், 2021 ஏப்பிறல் 01 இலிருந்து திருப்பிச் செலுத்தும் காலம் தொடங்குகின்றது.

(ஈ) மேலதிகப் பற்று வசதியைப் பொறுத்தவரை, உரிமம்பெற்ற வங்கிகள் 2020 ஒத்தோபர் 01 முதல் 2021 மாச்சு 31 வரை அல்லது ஒரு குறுகிய காலப்பகுதியில் நிலுவையாகவுள்ள வட்டியை ஒரு தவணைக் கடன் வசதியாக மாற்ற முடிவதுடன், மாற்றப்பட்ட கடன் மீது 4 சதவீதத்திற்கு மேற்படாத வட்டி வீதத்தை விதிக்க முடியும். அத்தகைய மாற்றப்பட்ட கடன்களுக்கான திருப்பிச் செலுத்தும் காலம் 12 மாதங்களாக இருப்பதுடன், 2021 ஏப்பிறல் 01 இலிருந்து திருப்பிச் செலுத்தும் காலம் தொடங்குகின்றது.

(உ) எனினும், கடன்பெறுநர் குறிப்பிட்ட காலப்பகுதிக்கு குறைவான காலப்பகுதியில் மாற்றப்பட்ட கடனைத் திருப்பிச் செலுத்த விரும்பினால் அல்லது உரிமம்பெற்ற வங்கி குறிப்பிட்ட கால வரையறையை விட நீண்ட காலம் அவகாசம் வழங்க விரும்பினால், அத்தகைய கோரிக்கைகள் உரிமம்பெற்ற வங்கியால் வசதியளிக்கப்படலாம். மாற்றப்பட்ட கடன் திருப்பிச் செலுத்தும் காலம் குறிப்பிட்ட காலத்திலிருந்து வேறுபடுமானால் உரிமம்பெற்ற வங்கியும் கடன்பெறுநரும் வட்டி வீதத்தில் உடன்பட வேண்டும்.

(ஊ) அடகுக்கடன் வசதிகளின், கடன் காலதாமதக் காலப்பகுதியிலுள்ள நிலுவைத் திகதி 2021 ஏப்பிறல் 01 வரை நீடிக்கப்படும்.

(எ) கடனட்டைகள் தொடர்பில் தகைமையுடைய கடன்படுநரால் கோரப்படும் எந்தவிதமான சலுகைகளுக்கும் இணங்குவதற்கு, உரிமம்பெற்ற வங்கிகள் பொருத்தமான வியாபாரத் தீர்மானங்களை எடுக்கலாம்.

(ஏ) உரிமம்பெற்ற வங்கிகள், 2020 ஒத்தோபர் 01ஆம் திகதி வரை ஏதேனும் அபராத வட்டி நிலுவையாக செலுத்தப்படாது இருந்தால் அதைத் தள்ளுபடி செய்ய வேண்டும். கடன் காலதாமதக் காலப்பகுதியில் அபராத வட்டி விதிக்கப்படமாட்டாது.

(ஐ) உரிமம்பெற்ற வங்கிகள், கடன் காலதாமதத்தை வழங்குவது தொடர்பில் அளவிற்கதிகமான கட்டணங்கள் அல்லது தொகைகளை விதிக்க முடியாது.

(ஒ) உரிமம்பெற்ற வங்கிகள், தகைமையுடைய கடன்படுநர்களின் கடன் காலதாமதத்திற்கு ஒப்புதலளிக்க முன்னர் அவர்கள் கடன் காலதாமதக் கடன் வசதிகளின் கட்டமைப்புப் பற்றி அறிந்துள்ளார்கள் என்பதை

உறுதிசெய்து கொள்ள வேண்டும். நிராகரிக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகள் அத்தகைய நிராகரிப்புக்கான காரணத்தைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

**6. கடன் காலதாமதம் தொடர்பிலான கணக்கியல் கரிசனைகள்**

உரிமம்பெற்ற வங்கிகள், இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் கொவிட்-19 பரவலினால் நிதியியல் அறிக்கையிடலில் ஏற்படக்கூடிய சிக்கல்கள் தொடர்பில் இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தினால் வழங்கப்படும் மேலதிக வழிகாட்டல்களின்படி கடன் காலதாமதத்திற்கான கணக்கீட்டைச் செய்ய முடியும். உரிமம்பெற்ற வங்கிகள் இது தொடர்பில் மேலதிக வழிகாட்டுதல்/ தெளிவுபடுத்தல்களை இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனம் மற்றும் கணக்காய்வாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**7. அறிக்கையிடல் தேவைப்பாடு**

உரிமம்பெற்ற வங்கிகள் 2020.12.15 இலிருந்து ஒவ்வொரு மாதமும் 15ஆம் மற்றும் 30ஆம் திகதியிலுள்ளவாறான தங்களது கடன்பாட்டாளர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் காலதாமத விபரங்களை ஐந்து வேலை நாட்களுக்குள் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு அறிக்கையிடல் வேண்டும்.

ஒப்பம்

**பேராசிரியர். டபிள்யு. டி. லக்ஷ்மன்**
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்